இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 341 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 06 – புதன்கிழமை 22 ஜுலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 341 : Thiruvalluvar Year - 2057 - Aadi 06 - Wednesday 22 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. கைது: தமிழ்நாட்டில் நடைபெறுவது

# சட்டத்தின் ஆட்சியா? சாத்தானின் ஆட்சியா?

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜுலை 22-

**விளாத்திக்குளம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் அவர்களை த.வெ.க. அரசின் காவல்துறை நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளதற்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை ஒன்றை தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**


**சட்டப்படியும் மனசாட்சிப்படியும் செயல்படாவிட்டால், அதற்கான பின்விளைவுகள் இருக்கும் என்று குறிப்பிட்டு, 'தமிழ்நாட்டில் நடப்பது சட்டத்தின் ஆட்சியா? சாத்தானின் ஆட்சியா?' என்று கடுமையாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதில் சாடியுள்ளார்.**

கோவில்பட்டி கிருஷ்ணன் கோவில் திடலில் 19ந் தேதியன்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் விளாத்திக் குளம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் கலந்துகொண்டு பேசினார். அப்போது முதலமைச்சர் பற்றியும் த.வெ.க. ஆட்சி பற்றியும் விமர்சித்துப் பேசினார். அதையடுத்து த.வெ.க.வினர் அளித்த புகாரின் அடிப்படையில் நேற்று முன்தினம் காலை அவர் கைது செய்யப்பட்டார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:-

ஜனநாயகப் பண்புகள் அறவே இன்றிச் செயல்படும் த.வெ.க. ஆட்சியில், விளாத்திக்குளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆட்சியில் நடைபெறும் தவறுகளையும் அவலங்களையும் சுட்டிக்காட்டும் தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இணைய ஆதரவாளர்கள் என அனைவரையும் தொடர்ந்து வேட்டையாடி வருகிறது Take Diversion Model த.வெ.க. அரசு.

**நீதிமன்றத்தால் குட்டுப்பட்ட த.வெ.க. அரசு!**

"அவதூறு வழக்குகளில் கூட எதற்கும் தொடர்பில்லாத குற்றப்பிரிவுகளைச் சேர்க்கிறீர்கள்?" என நீதிமன்றத்திடம் சமீபத்தில் தானே குட்டு வாங்கினீர்கள்?

கைது செய்யப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் தனது வழக்கறிஞர் மற்றும் ஆதரவாளர்களைச் சந்திக்கக் கூட மறுக்கப்பட்டுள்ளார். அவருக்கான மருந்துகளை வழங்கச் சென்றவர்களும் தடுக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவரின் அடிப்படைச் சட்ட உரிமைகளும் மனித உரிமைகளும்கூட மறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா?

மைதானத்தில் மாத்திரை அரைத்த அமைச்சர் மீதும், சொந்தக் கட்சி பெண் உறுப்பினரின் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்குமே நடவடிக்கை எடுக்க வக்கற்ற த.வெ.க. அரசு அரசியல் விமர்சனங்களுக்கு மட்டும் அலறித் துடித்துக் கைது செய்வது ஏன்?

**மனசாட்சிப்படி செயல்படுங்கள்!**

ஆட்சியாளர்களின் சட்டத்துக்குப் புறம்பான உத்தரவுகளை எல்லாம் நிறைவேற்றி அவர்களின் மனதைக் குளிர்விப்பது காவல்துறையினரின் பணி அல்ல! சட்டப்படியும் மனசாட்சிப்படியும் செயல்படுங்கள். இல்லாவிட்டால், there will be consequences. (அதற்கான பின் விளைவுகள் இருக்கும்)

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## விளாத்திகுளம் கழக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது !

### த.வெ.க. அரசின் அராஜகத்தை கண்டித்து கழகத்தினர் மறியல்!

தூத்துக்குடி, ஜுலை 22-

முதலமைச்சர் விஜய் குறித்து விமர்சித்த விளாத்திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ மார்க்கண்டேயனை காவல்துறையினர் கைது செய்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. த.வெ.க. அரசின் அராஜகத்தை கண்டித்து தி.மு.க.வினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கோவில்பட்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், முதலமைச்சர் விஜய் மற்றும் அவரது கட்சி குறித்து மார்க்கண்டேயன் விமர்சித்து பேசினார். இந்நிலையில், விஜய் குறித்து அவதூறாக பேசியதாகக் கூறி, தூத்துக்குடி காவல்துறையினர் நேற்று அதிகாலை தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனை கைது செய்தனர். அப்போது அங்கு திரண்ட தி.மு.க. வினர், காவல் துறையினரின் அராஜகத்தைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். பின்னர், காவல்துறையினரின் வாகனத்தை மறித்து, திமுகவினர் சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

தற்போது, தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில், தி.மு.க. எம்.எல்.ஏ மார்க்கண்டேயன் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சினிமா ஆக்‌ஷன் பாணியில் போலீஸ் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருக்கும் விஜய்க்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே, முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை, த.வெ.க. அரசு கைது செய்து அராஜகத்தில் ஈடுபட்டது.

ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ மீதான கூட்டுப் பாலியல் வன்கொடுமை வழக்கில் நடவடிக்கை எடுக்காத த.வெ.க. அரசு, வழக்கறிஞர்கள் நியமனத்திலும் பல நூறு கோடி ஊழல் செய்துள்ளதும் அம்பலமாகி உள்ளது. பழனியில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் நிலம் முறைகேடாக பத்திரப் பதிவு செய்யப்பட்டு மிகப்பெரிய ஊழல் அம்பலமான நிலையில், இது வரை நடவடிக்கை இல்லை.

ஆனால், முதலமைச்சர் குறித்து திமுகவினர் விமர்சனம் செய்தாலே கைது என பழிவாங்கும் நடவடிக்கையில் தவெக அரசு ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடெங்கும் சீர்கெட்டுப் போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி எம்எல்ஏக்களை கைது செய்வதில் சோஃபா மாடல் அரசு ஆர்வம் காட்டி வருவதாக விமர்சனம் எழுந்துள்ளது.

**நீதிமன்றக் காவல்**

கைது செய்யப்பட்ட மார்க்கண்டேயனிடம் 11 மணி நேரம் விசாரணை மேற்கொண்ட போலீசார் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்தியதை அடுத்து 15 நாள் நீதிமன்றக் காவலில் அவரை வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

---

## மேகதாது பிரச்சினை :

## நாடாளுமன்ற இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைப்பு!

### கழக எம்.பி.க்கள் பச்சை துண்டுடன் பங்கேற்று முழக்கம்!

புதுடெல்லி, ஜுலை 22–

மேகதாது பிரச்சனை குறித்து விவாதிக்கக் கோரி தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தியதால், மழைக்காலக் கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே நாடாளுமன்ற இருஅவைகளும் முடங்கின.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. தி.மு.க. உறுப்பினர்கள், பச்சை துண்டுடன் நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். மக்களவை இன்று தொடங்கியதும், தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் மேகதாது விவகாரம் குறித்து, அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்துவிட்டு, விவாதம் நடத்த வேண்டும் என மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர். பாலு வலியுறுத்தினார்.

நீட் முறைகேடு, அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேடு உள்ளிட்டவை குறித்து விவாதம் நடத்த சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளும் வலியுறுத்தின. ஆனால், சபாநாயகர் ஓம்பிர்லா இக்கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மேகதாது விவகாரத்தில் தமிழ்நாட்டு விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்டிட நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும், தமிழ்நாட்டிற்குரிய காவிரி நீரை எவ்வித தாமதமும் இன்றி கர்நாடக அரசு திறந்து விடுவதை ஒன்றிய அரசு உறுதி செய்திட வேண்டும் என தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து மக்களவையை நண்பல் 12 மணிவரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். 12 மணிக்கு அவை கூடியதும் குழப்பம் நீடித்ததால், நண்பல் 12.30 வரை மக்களவை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. மக்களவை 12.30 மணிக்கு தொடங்கிய போது திமுக உள்ளிட்ட கட்சிகள் மீண்டும் அவையின் மையப்பகுதிக்கு சென்று மேகதாது உள்ளிட்ட பிரச்சனைகளை விவாதிக்க வலியுறுத்தி முழக்கமிட்டனர். இதனால் மக்களவை 1 மணி வரையும், பின்னர் 2 மணி வரையும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை**

மாநிலங்களவையிலும் மேகதாது பிரச்சனை குறித்து விவாதிக்கக் கோரி தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தினார். நீட் தேர்வு முறைகேடுகள் மற்றும் குளறுபடிகள் குறித்தும், அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேடு புகார் தொடர்பாகவும் விவாதம் நடத்த வேண்டும் என சமாஜ்வாதி, இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். ஆனால், இதனை ஏற்க அவைத் தலைவர் மறுத்துவிட்டார். இதனால், அவையில் தொடர்ந்து அமைதியற்ற சூழல் நிலவியது. இதனைத் தொடர்ந்து மாநிலங்களவை நண்பல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியதும் பிற்பகல் 2 மணி வரை அடுத்தடுத்து 3 முறை ஒத்திவைக்கப்பட்டது.

---

## அதிகாரத்திற்கு அடிபணியும் காவல்துறை!

# தமிழ்நாட்டில் ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்!

## 'டைம்ஸ் ஆப் இந்தியா' படப்பிடிப்பு!

சென்னை, ஜுலை 22-

**தேவையற்ற அளவில் அதிகாரத்திற்கு அடிபணியும் தமிழ்நாட்டின் காவல்துறையால், இங்கு ஊடக சுதந்திரத்திற்கான அறிகுறியே இல்லை என்று டைம்ஸ் ஆப் இந்தியாவில் செய்திக் கட்டுரை வெளியாகி உள்ளது.**

**"காவல்துறைக்கு சொல்ல வேண்டிய ஒரு கதை இருக்கிறது" என்று தலைமையில் டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் (20.7.2026) அதன் தமிழ்நாடு பதிப்பு ஆசிரியர் அருண் ராம் எழுதியுள்ள செய்திக் கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-**

காவல்துறைக்கு பத்திரிகையாளர்களிடம் விசாரணை நடத்தும் உரிமை உண்டு. ஆனால், விசாரணையையே தண்டனையாக மாற்றும் உரிமை இல்லை. கடந்த வாரம் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் விஜயன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, ஒரு தனிப்பட்ட விசாரணையைப் பற்றிய கேள்விகளை மட்டுமல்ல; தமிழ்நாடு அரசு ஊடகச் சுதந்திரத்தை எவ்வாறு புரிந்து கொள்கிறது என்பதையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

ஜுலை 15 அன்று, சில த.வெ.க. (TVK) சட்டமன்ற உறுப்பினர்களை தங்கள் கட்சிக்கு இழுக்க முயன்றதாகக் கூறப்படும் வழக்கில், காவல்துறை செய்தியாளர் விஜயனை விசாரணைக்கு அழைத்தது. அதற்கு காவல்துறை கூறிய காரணம் என்ன வென்றால், ஜுலை 11 அன்று த.வெ.க. சட்டமன்ற உறுப்பினருக்கு லஞ்சம் வழங்கியதாக கைது செய்யப்பட்ட திருநாவுக்கரசு, அந்த செய்தி வாசிப்பாளருடன் சில வாட்ஸ்அப் தகவல்களைப் பரிமாறியிருந்தார் என்பதே.

ஒரு பத்திரிகையாளரை விசாரணைக்கு அழைப்பதில் தவறு இல்லை. ஆனால், அந்த விசாரணை நடைபெற்ற விதம் அச்சுறுத்தும் தன்மை கொண்டதாக இருந்தது. அந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆசிரியர் கூறுவதன்படி, விஜயனிடம் நள்ளிரவு வரை விசாரணை நடத்தி


Move over, police, we've a story to tell

STORYBOARD

ARUN RAM

தொடர்ச்சி 3ஆம் பக்கம்